செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள செய்யூர் பஞ்சாயத்தில் நடைபெற்ற கையாடல்.

*வினா எண் 1072 திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் லத்தூர் ஊராட்சி ஒன்றியம் செய்யூர் பஞ்சாயத்தில் கையாடல் நடைபெற்றுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதன் மதிப்பு எவ்வளவு?

(இ) கையாடல் செய்தவர்கள் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ரூ. 30,000

(இ) செங்கற்பட்டு நீதிமன்றத்தில் போலீஸ் துறையினரால் வழக்கு தொடரப்பட்டு விசாரணையில் உள்ளது.

திரு எஸ். டி. உகம்சந்த்: தலைவரவர்களே, செய்யூர் பஞ்சாயத்தில் சுமார் 89,000 ரூபாய் கையாடல் நடைபெற்றதாக 1974 ஆம் ஆண்டில் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை கொடுத்திருக்கிறார். ஆனால் இன்று வரை சுமார் 30,000 ரூபாய்க்குத்தான் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. இந்த வழக்கு போடுவதில் தாமதம் ஏற்பட்டால் இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் தப்பித்துக்கொள்ள வழிவகை இருக்கிறது. ஆகையால் வழக்கை துரிதமாக நடத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, கையாடல் செய்யப்பட்ட பணம் 30,000 ரூபாய் என்றுதான் குறிப்புகள் கூறுகின்றன. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 80,000 ரூபாய்க்கு மேல் என்று சொல்கிறார்கள். அது பரிசீலிக்கப்படும். அதேநேரத்தில் அந்த ஊராட்சி ஒன்றியத்தில் தொழில் வரி, வாகன வரி வசூல் செய்து, அதில் கையாடல் செய்துள்ளார். அவருடைய பெயர் ஏ. மாரியப்பன் என்பது. 1971 முதல் 1974 வரையிலான கணக்குகள் சம்பந்தமாக, குற்றப்பிரிவு காவல்துறையினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே அந்த நடவடிக்கை முடியும் தருவாயில் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேனி தொகுதியில் வைகை ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 1073—திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1981 மே 12]

தேனி சட்டமன்றத் தொகுதியில் அம்பாசமுத்திரத்தையும் கண்ட மனூரையும் இணைக்கும் வகையில் வைகை ஆற்றின் குறுக்கே ஒரு புதிய பாலம் அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

''சட்ட மன்ற வினு வில் சொல்லப்பட்ட பாலம் அமைக்கும் திட்டம் 1981–82 ஆம் ஆண்டு இரண்டாம் பாகத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட இருக்கிறது

மருத்துவமனைகளில் 'லோகோ மார்க்' உள்ள மருந்துகளை வாங்குதல்

* வினா எண். 1074—திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளில் ''லோகோ மார்க்' இல்லாத எந்த மருந்துகளும் வாங்கக் கூடாது என்று உத்திரவு போடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் காரணமாக பல மருந்துகள் வாங்க முடியாமல் நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க முடியாமல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது உண்மையா?

(இ) இந்த நெருக்கடியைத் தீர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) உயிர்காக்கும் மருந்துகளைத் தவிர எந்த மருந்துகளும் லோகோ முத்திரையில்லாமல் வாங்கக்கூடாது என்று அரசு உத்திரவிட்டுள்ளது.

(ஆ) இல்லை

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[முற்பகல் 9.30]

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்த லோகோ மார்க் உள்ள மருந்துகளைத்தான் வாங்கவேண்டும் என்ற கட்டாயமான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதன் விளைவாக உயிர்காக்கும் மருந்துகள் சில சந்தர்ப்பங்களில் திடீரென்று தீர்ந்து போய் விடுவதால் அவற்றை வாங்க முடியாத ஒரு நெருக்கடி ஏற்படுகின்றது. இதன் காரணமாக சில முக்கியமான நேரங்களில் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க முடியாமல் கஷ்டம் ஏற்படுகின்றது, இதுபற்றி ஏற்கெனவே அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆகவே சில முக்கியமான மருந்துகள் திடீரென்று தீர்ந்து போகின்ற நேரங்களில் அவற்றை வாங்குவதற்கான தாராளமான அனுமதியை அரசு அளிக்க முன் வருமா?